DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 98/2019**

**(CNR.No: TNTH06-000160-2019 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராசுத்தேவர் | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **DW1** | |

---

நாள் :01.11.2023

**முதல் விசாரணை**

1) நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி. 1,2 பிரதிவாதிகள் தரப்பில் 1வது சாட்சியாவேன். நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. அதைப்படித்துப் பார்த்து தான் கையொப்பம் போட்டேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன். கடந்த 09.01.1948ம் தேதிய எங்கள் தந்தை பெயரிலுள்ள கிரைய ஆவணத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 13.09.2017ம் தேதிய கிராம நிர்வாக அலுவலரால் எனக்கு வழங்கிய சிட்டா உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2) கடந்த 10.08.2018ம் தேதி வட்டார வளர்ச்சி அலுவலர் 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் சார்பு நகல் தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 26.06.2015ம் தேதி வட்டாட்சியர் எனக்கு அனுப்பிய குறிப்பாணை அசல் தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 29.04.2016ம் தேதியில் மாண்புமிகு சென்னை

உயர்நீதிமன்றத்தின் உத்தரவு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 08.07.2016ம் தேதி 3ம் பிரதிவாதி எனக்கு புலதணிக்கை அளவு பணிக்காக அனுப்பிய அழைப்பாணை அசல் தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 05.04.2017ம் தேதி 3ம் பிரதிவாதி சர்வே எண்.453/11 எனது பெயருக்கு பட்டா வழங்கி பிறப்பித்த உத்தரவு அசல் தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 12.01.2017ம் தேதிய 4ம் பிரதிவாதி, எனக்கும், வாதிக்கும் அனுப்பிய உத்தரவு ஆணை அசல் தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3) கடந்த 17.02.2017ம் தேதிய வாதி, என்மீது 5ம் பிரதிவாதி அலுவலகத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு சார்பு நகல் தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 15.07.2017ம் தேதிய நான், 5ம் பிரதிவாதி அலுவலகத்தில் தாக்கல் செய்த எதிருரை கைநகல் தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 30.05.2017ம் தேதி 7ம் பிரதிவாதியால் எனக்கு சர்வே எண். 453/11ல் கட்டிடம் கட்ட அனுமதி அளித்து வழங்கிய தடையில்லாச்சான்று தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 07.04.2017ம் தேதிய என் பெயரிலுள்ள மனைவரி தோராயப்பட்டா அசல் தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4) கடந்த 10.08.2017ம் தேதிய சர்வே எண். 453/11க்கு எனக்கு கிராம நிர்வாக அலுவலரால் வழங்கிய மனைவரி தோராய பட்டாவின் உண்மைநகல் தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 03.09.2018ம் தேதி 6ம் பிரதிவாதி, எனக்கு அனுப்பிய விசாரணை அழைப்பாணை சார்பு நகல் தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 18.06.2015ம் தேதிய நான், 4ம் பிரதிவாதியிடம் பட்டா கேட்டு கொடுத்த மனுவின் கைநகல் தாக்கல் செய்கிறேன். **(அது பி.வா.சா.ஆ 15**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

( கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுக்கோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

(ஒ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.